தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

இதழ் 03

# தமிழ்க் கதிர்

மாணவர் சஞ்சிகை – ஜூலை 2025 | www.tsch.org.au



தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

# பதிப்பாசிரியர் செய்தி

மாணவர்களது தமிழாற்றலை அவர்தம் பால்ய காலத்தில் இருந்தே விருத்தி செய்வதில், ஆண்டுகள் பல கடந்த ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் செயற்பாடு போற்றத்தக்கது.

அவுஸ்திரேலிய மண்ணில் தமிழைப் பேணிப் பாதுகாக்கும் கல்விச் சாலைகளில் ஒன்றாக இவ் அரும்பணியை முன்னெடுத்து வரும் சுழலில், தமது மாணாக்கரின் தமிழ் சார்ந்த சிந்தனைக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் தமிழ்க்கதிர் என்ற மாணவர் சஞ்சிகையை வருடம் தோன்றும் இக்கல்வி நிலையம் கொடுத்து வருகின்றது.

அந்த வகையில் 2025 ஆம் ஆண்டு அரையாண்டின் நிறைவில் தமிழ்க்கதிர் சஞ்சிகையை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

இந்தச் சஞ்சிகை மாணவர்களது சித்திரத் திறன், பல்வேறு களங்கள் சார்ந்து எழுதிப் பகிர்ந்திருக்கும் ஆக்கங்கள் என்று அணி செய்கின்றது.

உலகின் தலை சிறந்த எழுத்தாளர்கள் பின்னாளில் அப்புகழை நிலை நிறுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது அவர்களது பிள்ளைப்பிராயத்தில் எழுதத் தொடங்கியதன் பரிணாமம் எனலாம்.

ஒரு குறுகிய காலத்தில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை எழுதிய மாணவர்களுக்கும், அவர்தம் பெற்றோருக்கும், ஆசியர்கள் மற்றும் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய நிர்வாகத்தினருக்கும் நன்றியறிதலைப் பகிர்ந்து கொள்கிறேன்.

**க.பிரபாகர்**
**பதிப்பாசிரியர்**
**ஹோம்புஷ்**
**தமிழ்க் கல்வி நிலையம்**




கோகுல்


இளன் கோகுல்
Parent Durgavathi Venkataswamy
Child : ILAN GOKUL
Age : 4 years 11 months
APPLY SUNSCREEN
EVERY 2 HOURS.
SUN
screen
SPF
30+


அகில்
5/4/25
பாலர் முன்பள்ளி


ஆரியா.
08/03/2025
பாலர் முன்பள்ளி


பல்லவராஜன்



நிலா நிலா ஓடி வா



மாறன்

22/03/2025

பாலர் முன்பள்ளி




நிக்ரா.
24/05/2025
பாலர் முன்பள்ளி.


பசு
அஜயன்


தோட்டம்
தோட்டம்
ஆதிரா 1B
என் பெயர் மன்கா. உன் பெயர் என்ன?
வணக்கம் மன்கா. என் பெயர் லில்லியன்.
வணக்கம் மன்கா, லில்லியன், நான் தான் கதிசா.
வணக்கம் நண்பர்களே!
I'm not weird, I'm a unicorn


ப்ரணவ் பாலாஜி சாந்திபிரியா Yr-1A
* நான் ஹோம்புஷ் தமிழ் பாடசாலையில் பயில்கிறேன்.
* எனக்கு தமிழ் படிக்க மிகவும் பிடிக்கும்.
* என் ஆசிரியை அழகாக தமிழ் கற்க வைப்பார். தமிழ் பாடசாலை செல்ல எனக்கு மிகவும் பிடிக்கும்.

# எனது குடும்பம்



எனது குடும்பம் மிகவும் அன்பான குடும்பம். எனது குடும்பம் அழகான குடும்பம். எனது குடும்பத்தில் நான், என் அப்பா, என் அம்மா, என் அண்ணா ஆகியோர் இருக்கிறோம். என் குடும்பத்தில் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். என் குடும்பத்தை எனக்கு மிகவும் பிடிக்கும்.

ராஜராஜேஷ்வரி.மகு
முதலாம் ஆண்டு.
1A



## சிட்னி ஒப்பெரா மாளிகை

1. ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்ன நகரத்தில் உள்ளது.
2. இது ஒரு முக்கியமான சுற்றுலாத்தலம்.
3. இந்த கட்டடம் பார்க்க அழகாக இருக்கும்.
4. இதைச் சுற்றி தண்ணீர் இருக்கும்.

அக்ஷிகா 3/A

## தாத்தாவும் நானும்

1. எனது தாத்தாவின் பெயர் விஜயமனோரஞ்சன்.
2. எனக்கு தாத்தாவைப் பிடிக்கும்
3. எனது முதல் சொல் "தாத்தா".
4. அவர் இலங்கையில் வசிக்கிறார்.
5. நான் அவருடன் கிரிக்கட் விளையாடுவேன்.

மிருதுளா.திரிசூலன் ஆண்டு 2A



# பெண்

இன்றைய பெண்கள் எல்லாம் திறமையானவர்கள்.
அவர்கள் சமையல் செய்கிறார்கள்.
குழந்தைகளை கவனிக்கிறார்கள்.
வேலைக்கும் செல்கிறார்கள்.
எல்லாவற்றையும் மகிழ்ச்சியாகச் செய்கிறார்கள்!



சாய்வி. வெ
ஆண்டு-2A

# தமிழ் மொழி

தமிழ் மொழி எமது தாய் மொழி.

தமிழுக்கும் அமுதென்று பேர் என்றார் பாரதிதாசன்.

நாம் அவுஸ்திரேலியத் தமிழர்.

தமிழில் 12 உயிர் எழுத்துக்களும் 18 மெய் எழுத்துக்களும் 216 உயிர்மெய் எழுத்துக்களும் 1 ஆயுத எழுத்தும் உள்ளன.

உலகில் உள்ள மொழிகளில் தமிழ் ஒரு பழமையான மொழி.

திருவள்ளுவர் எழுதிய திருக்குறளை தமிழ் மறை என்றும் கூறுவார்கள்.

- அயனா ஜெயகணேஷ்
ஆண்டு 3 Class 2A

## முதலை

கார்த்திக் ஆண்டு 4

முதலை ஊர்வன வகையைச் சேர்ந்த விலங்கு. முதலை நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியது. முதலை ஒரு மாமிச உண்ணி ஆகும். முதலைகளின் உடல் நீளமாகவும், தடித்த தோலுடனும் இருக்கும். முதலைகளிற்கு பலமான தாடைகளும், கூர்மையான பற்களும் உண்டு. இதனால் அவை இரையைப் பிடிக்கவும் கிழித்து உண்ணவும் உதவுகின்றன. முதலைகளிற்கு தலையின் மேல் கண்களும், நாசித் துவாரங்களும் அமைந்திருக்கின்றன. இதனால் முதலைகள் நீருக்கு அடியில் மூழ்கி இருக்கும் போது சுவாசிக்கவும், பார்க்கவும் முடியும். முதலைகள் முட்டையிடும். முட்டையிலிருந்து குஞ்சுகள் பொரிக்கும். முதலையின் தோலில் இருந்து கைப்பைகள், குளிர் ஜக்கெட் என்பன செய்கிறார்கள். அவுஸ்திரேலியாவின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் முதலைகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. கெயின்ஸ் நகரிற்கு அருகில் உள்ள கிறீன் தீவில் (Green Island) பல முதலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நான் அங்கு சென்றேன். நான் ஒரு முதலையை தொட்டேன். ஒரு பெரிய முதலை இருந்தது ஆனால் அது படுத்திருந்தது.







# எல்லா உயிர்களுக்கும் அன்பு செலுத்துவோம்

இந்த உலகில் பல உயிரினங்கள் வாழ்கின்றன. விலங்குகள், பறவைகள், ஊர்வன எனப் பல வகையான உயிரினங்கள் உள்ளன. நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். உயிரினங்களுக்கு தீமை செய்யக்கூடாது. பல உயிரினங்கள் நமக்கு நன்மை செய்கின்றன. நாய் நன்றியுடன் நமது வீட்டைக் காவல் செய்கிறது. பசு மற்றும் ஆடு சுவையான பால் தரும். கோழி மற்றும் வாத்து நமக்கு முட்டை தரும். கிளி, மைனா போன்ற பறவைகளை நாம் வளர்க்கிறோம். நாம் செல்லப்பிராணிகளை மிருகவைத்தியரிடம் கொண்டு சென்று தடுப்பூசி கொடுக்கவேண்டும். இதன் மூலம் அவற்றிற்கு நோய்கள் வராமல் தடுக்கலாம். இறைவன் இவ்வுலகில் மனிதர்களுடன் பல விதமான உயிரினங்களை படைத்தார். நாம் இவற்றுடன் ஒன்றாக கூடி வாழ வேண்டும்.

நிக்ஷா நிமலன்
ஆண்டு 4









## என் இந்தியா பயணம்

நான் சமீபத்தில் பெற்றோர்களுடன் இந்தியா சென்றேன். அங்கே என் பாட்டி, தாத்தாவை சந்தித்தேன். அவர்கள் பண்ணையில் வசிக்கிறார்கள்.

பண்ணையில் வாழ்வது மிகவும் பிடிக்கும். நான் நாய்களுடன் விளையாடினேன். அவை சுறுசுறுப்பாக இருந்தன.

பாட்டி ருசியான உணவுகள் சமைத்தார்கள்.

இந்திய பயணம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

- KAVINADITHYA ASHOK KUMAR

# எங்கள் தமிழ்!




தமிழ் எங்கள் தாய்மொழி. தமிழ் எமது அடையாளம் ஆகும். உலகின் பழமையான மொழிகளில் ஒன்று எனப் போற்றப்படும் தமிழ்மொழி, இலக்கியமும் பண்பாடும் நிறைந்த ஒரு செழுமையான மொழியாகும். தமிழில் திருக்குறள், சிலப்பதிகாரம், இராமாயணம், மகாபாரதம் போன்ற பல அருமையான நூல்கள் உள்ளன. அவை நமக்கு ஒழுக்க நெறி, வாழ்க்கைமுறை, சமூக விழுமியங்கள் போன்றவற்றை எடுத்துரைக்கின்றன. தமிழைப் பேணிப் பாதுகாப்பது எமது கடமையாகும். ஆகவே, தமிழில் பேசுவோம், தமிழராய் வாழ்வோம்!

ஆக்கம்: பிரீத்
ஆண்டு 5
14.06.2025

# அன்னையர் தினம்

எம்மைப் பெற்று எடுத்து எமக்காகத் தம்மை அர்ப்பணிக்கும், எமது அம்மாக்களுக்கு நன்றி கூறும் நாள், அன்னையர் தினம். "கண்ணை இமை காப்பது போல" எமது அம்மா எம்மை எத்தருணத்திலும் காப்பாற்றி வருபவர். நாங்கள் தவறு செய்யும் போது, எம்மை சுட்டி காட்டி சரியான முறையில் வழி நடத்துபவர் எமது அம்மா.

எமது அன்னைக்காகக் கொண்டாடும் அன்னையர் தினம், அமெரிக்க நாட்டவர்களால் தொடங்கப்பட்டது. இன்று உலகில் பல நாடுகளால் கொண்டாடப்படுகின்றது. பல நாடுகள் இதனை வேறுவேறு நாட்களில் கொண்டாடுகின்றனர்.

அவுஸ்திரேலியாவில் அன்னையர் தினம் வைகாசி மாதத்தில், இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை கொண்டாட படுகிறது.

பாடசாலைகள் அன்னைர் தினத்தை முன்னிட்டு காலைத் தேனீர் நிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

அம்மா நித்திரையால் எழும்புமுன்பு, காலை உணவு தயாரித்து, அம்மாவை உபசாரம் செய்வதுடன், நாள் ஆரம்பமாகின்றது. மதிய உணவு சாப்பாட்டுக்கடைகளிலும், பின்பு பூங்கொத்தும் கொடுத்தும் அம்மாக்களை மரியாதை செய்யும் வழக்கம் காணப்படுகிறது. நன்றி கூறும் மடல்களை எமது சிறு கையெழுத்துடன் சேர்த்து கொடுக்கலாம்.

ஷாரினி பவன்
ஆண்டு 6
2025

24

# பருவகாலங்கள்

அவுஸ்திரேலிவில் நான்கு பருவகாலங்கள் உள்ளன.

## இலை உதிர் காலம்

பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் மரங்களிலிருந்து இலைகள் உதிரும். மெதுவாக குளிர்த் தொடங்கும். மாலை நேரம் மெதுவாக இருளத் தொடங்கும்.

## குளிர் காலம்

கடுங்குளிரான மாதங்கள், ஆனி, ஆடி, ஆவணி ஆகும். சில இடங்களில் பனி கொட்டும். இரவு நேரம் கூடுதலாக இருக்கும்.

## இலை துளிர் காலம்

புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை வசந்தகால மாதங்ள் ஆகும். இப்போது மரங்கள் எல்லாம் இலைகள் அரும்பி பூத்துக் குலுங்கும். இடட்டும், குளிரும் குறைந்து சூரியன் அதிகாலையில் உதிக்கும்.

## கோடை காலம்

அதி கூடிய வெப்பமான காலமாக மார்கழி, தை, மாசி இருக்கின்றன. பகல் வேளை கூடுதலாக இருக்கும். நீண்ட பாடசாலை விடுமுறையினால் தூரப் பயணங்கள் செய்யலாம்.

ஹஷினி பவன்
ஆண்டு 3A
2025

# இயற்கையின் வரம் - மரம்



"நீரின்றி அமையாது உலகு. வாழும் அனைத்து உயிர்களுக்கும் நீர் அவசியம். பூலோக அமிர்தமாம் நீர் மழையின் வழியே நமக்குக் கிடைக்கிறது. மழை பெய்வதற்கு மரங்கள் அவசியம். மரங்கள் இல்லையென்றால் மழை இல்லை. மழையின் மூலம் நீர் வளத்தைப் பெருக்க மரங்கள் அவசியம். மரங்கள் மழையை மட்டுமல்ல நமக்குத் தேவையான ஆக்சிஜனையும் தருகின்றன. மரங்கள் அதிகம் வெட்டப்படுவதால் பூமியின் வெப்பம் அதிகரிக்கிறது. ஆதலால் மரங்களை வளர்ப்போம், மழை பெறுவோம். இயற்கையைக் காப்போம்."

நன்றி

மே.க பகலவதிராசன்
அரும்பு

# அன்னையர் தினம்

எம்மைப் பெற்று எடுத்து எமக்காகத் தம்மை அர்ப்பணிக்கும், எமது அம்மாக்களுக்கு நன்றி கூறும் நாள், அன்னையர் தினம். "கண்ணை இமை காப்பது போல" எமது அம்மா எம்மை எத்தருணத்திலும் காப்பாற்றி வருபவர். நாங்கள் தவறு செய்யும் போது, எம்மை சுட்டி காட்டி சரியான முறையில் வழி நடத்துபவர் எமது அம்மா.

எமது அன்னைக்காகக் கொண்டாடும் அன்னையர் தினம், அமெரிக்க நாட்டவர்களால் தொடங்கப்பட்டது. இன்று உலகில் பல நாடுகளால் கொண்டாடப்படுகின்றது. பல நாடுகள் இதனை வேறுவேறு நாட்களில் கொண்டாடுகின்றனர்.

அவுஸ்திரேலியாவில் அன்னையர் தினம் வைகாசி மாதத்தில், இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை கொண்டாடபடுகிறது.

பாடசாலைகள் அன்னைர் தினத்தை முன்னிட்டு காலைத் தேனீர் நிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

அம்மா நித்திரையால் எழும்புமுன்பு, காலை உணவு தயாரித்து, அம்மாவை உபசாரம் செய்வதுடன், நான் ஆரம்பமாகின்றது. மதிய உணவு சாப்பாட்டுக்கடைகளிலும், பின்பு பூங்கொத்தும் கொடுத்தும் அம்மாக்களை மரியாதை செய்யும் வழக்கம் காணப்படுகிறது. நன்றி கூறும் மடல்களை எமது சிறு கையெழுத்துடன் சேர்த்து கொடுக்கலாம்.

ஹரினி பவன்
ஆண்டு 6
2025



# கலைவிழா

இந்த ஆண்டு மே மாதம் பத்தாம் தேதி ஜேம்ஸ் ரூஸ் விவசாய மேல்நிலைப் பள்ளியில் கலை விழா நடந்தது. நடனங்கள், பாடல்கள், வித்தியாசமான நாடகங்கள் மற்றும் ஏகுஇ பரிசு வழங்குதல் போன்ற பல நிகழ்வுகளை நடந்தது. கலைவிழாவில் முன்-வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து வகுப்புகளும் பங்கேற்றன. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு முன்பு 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் அறிமுக உரைகளை நிகழ்த்திக் கொண்டிருந்தனர்.

கலைவிழா தேசிய கீதம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. அதன் பிறகு பாலர் வகுப்பு முதல் 6-ம் வகுப்பு வரையிலான வகுப்புகளுக்கு நிகழ்ச்சிகள் தொடங்கின, அங்கு அவர்கள் பல்வேறு நடனங்கள், நாடகங்கள் மற்றும் பாடல்கள் நடந்தது. அதன் பிறகு நாங்கள் ஓய்வு எடுத்து 7-10 மேல் வகுப்புகளுக்குத் தொடங்கினோம், அங்கு அவர்கள் மகாபாரதம் நாடகம் நடத்தினர். அனைத்து வகுப்புகளுக்கும் நிகழ்ச்சிகள் முடிந்ததும், சிறப்பு விருந்தினர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டனர், பின்னர் ஏகுஇ மாணவர்களுக்கான பரிசளிப்பு நடந்தது. நாள் முடிவில் மகாபாரதத்தில் பங்கேற்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான குழு புகைப்படம் எடுக்கப்பட்டது.

நான் மகாபாரதம் நாடகத்தில் பங்கேற்றேன், எனது நடிப்பு தொடங்குவதற்கு முன்பு, நான் கீழ் வகுப்புகளின் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன், நாடகம், பாடல்கள் மற்றும் நடனங்களை என் நண்பர்களுடன் ரசித்தேன். எனது நடிப்பிற்காக, நான் சிறிய முன் மேடையில் நடனமாடினேன். எனது நடிப்புக்குப் பிறகு, மற்ற வகுப்புகளின் நிகழ்ச்சிகளைப் பார்த்தேன் மற்றும் ஏகுஇ மாணவர்களின் பரிசு வழங்குவதைப் பார்த்தேன். மேலும் நாள் முடிவில், நாங்கள் ஒரு குழு புகைப்படம் எடுத்தோம். இந்த வருட கலைவிழாவின் நடனங்கள், நாடகங்கள் மற்றும் பாடல்களின் நிகழ்ச்சிகளை நான் ரசித்தேன், மற்றும் அதில் பங்கேற்றும் ரசித்தேன். கலைவிழா மகிழ்ச்சியாகவும் சிறப்புடனும் அமைந்தது.

**- தாரிகா ஸ்ரீ விக்னேஷ் குமாரன்,**
**மேல்நிலை கூட்டு வகுப்பு**



# தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள்

தமிழர்களின் பண்பாட்டில் விழுமியங்கள் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன. விழுமியங்கள் என்றால் என்ன? விழுமியங்கள் என்பது ஒருவரின் நம்பிக்கைகள் மற்றும் கருத்துக்கள் மூலம் வாழும் வாழ்க்கை ஆகும். முக்கிய விழுமியங்கள் நேர்மை, உண்மை, நட்பு, அன்பு, கருணை, பொறுப்பு மற்றும் கொடை ஆகும். சங்க கால இலக்கியங்களில் புறநானூறில் கொடை மற்றும் நட்பு ஆகிய விழுமியங்கள் பற்றிய வரலாறு இருக்கின்றன.

தமிழரின் பண்பாடுகளில் நட்பு மிகவும் முக்கியமானது. நட்பு என்பது நட்பு என்பது இருவருக்குள் அல்லது பலரிடையே எற்படும் ஓர் உறவாகும். இதற்கு உதாரணமாக தமிழில் வரும் பிசிராந்தையார் மற்றும் கோப்பெருஞ்சோழன் கதையைக் கூறலாம். கோப்பெருஞ்சோழன் சோழநாட்டின் மன்னன். பிசிராந்தையார் பாண்டிய நாட்டின் ஒரு புலவர் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனைப் புகழ்ந்து பல பாடல்களைப் பாடினார். இதைக் கேள்விப்பட்ட கோப்பெருஞ்சோழன் பாண்டிய நாட்டிற்குச் செல்லும் புலவர்கள் மூலமாக பிசிராந்தையாரை சுகம் விசாரித்து வாழ்த்து மடல்கள் அனுப்பினார். இவ்வாறாக முகம் பாராமல் இவர்கள் இருவருக்குமிடையிலேயே நட்பு வளர்ந்தது. கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும்போது தனது நண்பன் பிசிராந்தையார் வருவார் என்று நம்பிக்கையுடன் இருந்தார். அதுபோலவே, பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த இடத்திற்கு அருகில் தனக்கென் ஒதுக்கப்பட்ட இடத்தில் வடக்கிருந்தார். இது இவர்களின் நட்பை துல்லியமாக காட்டுகின்றது.

தமிழரின் பண்பாடுகளில் நட்பு மிகவும் முக்கியமானது. நட்பு என்பது இருவருக்குள் அல்லது பலரிடையே எற்படும் ஓர் உறவாகும். இதற்கு பிசிராந்தையார் மற்றும் கோப்பெருஞ்சோழன் மிகைதையைரும் கதையைக் கூறலாம். கோப்பெருஞ்சோழன் சோழநாட்டின் மன்னன். பிசிராந்தையார் பாண்டிய நாட்டின் ஒரு புலவர். பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனைப் புகழ்ந்து பல பாடல்களைப் பாடினார்.

இதைக் கேள்விப்பட்ட கோப்பெருஞ்சோழன்



# தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள்

பாண்டிய நாட்டிற்குச் செல்லும் புலவர்கள் மூலமாக பிசிராந்தையாரை சுகம் விசாரித்து வாழ்த்து மடல்கள் அனுப்பினார். இவ்வாறாக முகம் பாராமல் இவர்கள் இருவருக்குமிந்தையிலேயே நட்பு வளர்ந்தது ம்பகப்பெருஞ்சோழன்ந்தடக்கிருக்கும்போது பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த இடத்திற்கு அருகில் தனக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் வடக்கிருந்தார். இது இவர்களின் நட்பை துல்லியமாக காட்டுகின்றது.

தமிழரின் பண்பாடுகளில் கொடை மிகவும் முக்கியமானது. கொடை என்றால் பணம், பொருள் தேவைப்படுவோருக்கு இரக்க குணத்துடன் அவற்றை கொடுத்து உதவுதல். கொடைக்கு சிறந்த உதாரணமாக பாரி மன்னனை கூறலாம் பாரி மன்னன் மலைப்பகுதியில் அமைந்துள்ள சிறிய நாடாகிய பறம்பு நாட்டின் மன்னன். பாரி மன்னன் மக்களை சந்தித்து கதைக்க நகர்வலம் செல்வான். மன்னன் மேலேயுள்ள மலைவளத்தை கண்டு ரசிப்பான். அதுபோல, மலையின் கீழேயுள்ள காட்டு வளத்தையும் ரசிப்பான்.

அவ்வாறு ஒரு நாள் அடர்ந்த காட்டிற்குள் தேரில் சென்று கொண்டிருந்தான். அப்போது, திடீரென்று மன்னன தேரை நிறுத்துமாறு கூறினான். உடனே தேர்ப்பாகனும் தேரை நிறுத்தினான். பாரி வள்ளல் தேரிலிருந்து இறங்கினான். அங்கே ஒரு முல்லைக்கொடி வளர்ந்திருந்தது. அதில், நிறைய அரும்புகள் கொத்து கொத்தாக இருந்தன. ஆனால், அந்த முல்லைக்கொடி பற்றுக்கோடு இல்லாமல் சிறிய காற்றிலே அங்கும் இங்கும் அசைந்து கொண்டிருந்தது. பெரிய காற்று வீசினால் ஒடிந்து விழுந்து விடும்போல் இருந்தது. மனம் இரங்கிய மன்னன பாகனிடம் குதிரைகளை அவிழ்த்து ஓட விடுமாறு கூறினான். பின்னர் தேரை இழுத்து அந்த முல்லைக் கொடியைத் தேரின் மேலே படரவிட்டு, அதைப் பார்த்து அளவற்ற ஆனந்தம் அடைந்தான். பாரி முல்லைக்கு தேர் கொடுத்த செய்தி தமிழுலகம் முழுவதும் பரவியது. புலவர்கள் புகழ்ந்தனர். மன்னர்கள் பாராட்டினார்கள். அன்று முதல் எல்லோரும் பாரியை முல்லைக்கு தேர் அளித்த வள்ளல்' என்று பாராட்டினார்கள்.

தமிழர்கள் சிறந்த விழுமியங்களை பின்பற்றி சிறப்பாக வாழ்ந்தார்கள். உதாரணமாக பிசிராந்தையார் மற்றும் கோப்பெருஞ்சசோழன் நண்பர்களாக வாழ்ந்தார்கள். பாரி மன்னன் சிறந்த கொடை வள்ளலாக வாழ்ந்தார். நாமும் இவர்களைப் போலவே சிறந்த விழுமியங்களின் மூலம் சிறப்பாக வாழ்வோம். எமது விழுமியங்களைப் போற்றிப் பாதுகாப்போம்.

**ஆக்கம்: விசாகன் சுரேந்திரன்**

# தாய்மொழிக் கல்வியின் அவசியம் பேச்சு



இங்கு வருகை தந்திருக்கும் ஆசிரியர்களுக்கும் எனது சக மாணவர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

இன்று நான் உங்கள் முன் தாய்மொழிக் கல்வியின் அவசியம் பற்றி உரையாற்ற வந்துள்ளேன். தாய் மொழி என்றால் என்ன? எமது தாய், தந்தை பேசும் மொழி, பாட்டா பாட்டி மற்றும் எமது வம்சத்தின் மூதாதையர்கள் பேசிய மொழி எமது தாய்மொழியாகும். உலகில் உள்ள நாடுகளில் நாம் வாழும் அவுஸ்திரேலியா மிகவும் பிரசித்தி பெற்ற பல்கலாசார நாடு என்பதை நாம் அறிவோம். இங்கு எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன என்பது யாருக்காவது தெரியுமா? ஆங்கிலத்தை பிரதான மொழியாகக் கொண்ட எமது நாட்டில், முன்னூறுக்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன என்பது வியத்தகு விடையமாகும். 2021ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி எழுபத்தி இரண்டு சதவீத மக்கள் வீடுகளில் ஆங்கிலம் மட்டுமே பேசுகின்றனர். ஆகவே தாய் மொழி பயன்பாடு குறைவாக இருகின்றது

எமது தாய்மொழி ஒரு மொழி மட்டுமல்ல. அது எமது உணர்வுகளையும், பாரம்பரியங்களையும், பண்பாடுகளையும் வெளிப்படுத்தும் ஒரு ஊடகமாகும். மகாத்மா காந்தி அடிகள் இதற்காகவே பிற மொழிகளை நாம் கற்பதற்கு முன் எமது தாய்மொழியை நாம் நன்கு கற்றறிந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். நாம் பேசும் தாய்மொழி எமக்கான அடையாளத்தையும் எமது பூர்வீகத்தின் சிறப்பையும்



எடுத்துக்காட்டுகிறது. நமது தாய்மொழி மூல மாக எமது குடும்பத்துடனும், உறவினர்களு டனும், நண்பர்களுடனும் உரையாடலாம். அது மட்டுமல்ல. எமக்கென உரித்தான கலை. கலாசாரம், இலக்கியங்கள், பழைய வரலாறு கள் போன்றவற்றையும் கற்றறிந்துகொள்ள முடியும். இதன் மூலம், நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? எமது வரலாற்றின் சிறப்புக்கள் எவை? எமது தனித்துவம் என்ன? என்பன போன்ற பல்வேறு கேள்விகளுக்கான விடை கள் தெட்டத்தெளிவாக எமக்குப் புலன்படும்.

இன்றைய பல்கலாசார உலகில் எமது தாய் மொழியை கற்பது மிகவும் அவசியமானது. எமது தாய்மொழியை கற்பது மட்டுமன்றி, அதனை பாதுகாத்து. அடுத்து வரும் தலைமு றையினருக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். இதன் மூலமாக எமது அடையாளத்தினை அழியாது காப்பாற்ற முடியும். நாம் அன்றாடம் எமது, சமூகத்தில், வீட்டில் எமது தாய்மொ ழியை பேசும் பழக்கத்தை வளர்க்க வேண்டும்.

எமது தாய்மொழியின் உதவியுடன் பழமொ ழிகள், பாடல்கள். கதைகள், பண்டைய இலக்கியங்கள், வரலாறுகள் போன்றவற்றை அறிந்து கொள்ளலாம். இவை நம் முன்னோர் களின் வாழ்க்கை முறைகளையும் அவர் களின் அறிவையும். சிறப்பையும் உணர உதவுகின்றன.

நாம் புலம்பெயர்ந்து வேறு நாட்டில் வாழ்ந் தாலும், நாம் எமது தாய்மொழியை கற்பது மிகவும் அவசியமானது. எமது தாய்மொழி யைக் கற்பதன் மூலம் எமெக்கென ஒரு அடை யாளத்தையும், எமக்கான பழக்கவழக்கங்க ளையும், பண்பாடுகளையும் மற்றும் கலை, கலாசாரம் போன்றவற்றையும் அறிந்து, நம் வாழ்வில் சிறந்து விளங்க முடியும். எமது தாய் மொழியை நாம் கற்பதோடு மட்டுமல்லாமல், எமக்கு அடுத்து வரும் சந்ததியினரும் தாய் மொழிக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து, அதனைத் தொடர்ந்தும் கற்று அதன் சி றப்பினை நிலைநாட்ட வேண்டுமென்று உங்களிடம் பணிவுடன் கோருவதோடு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி எனது சிறு உரையினை முடித்துக் கொள்கின்றேன்.

நன்றி வணக்கம்.

அக்க்ஷயன் ஜெயகணேஷ்

# பாரதியார்



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே என்று தமிழ் மொழிக்கு வாழ்த்துப் பாடிய பாரதியார் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்திற்குப் புதுமை சேர்த்த கவிஞர். பாரதியார் கவிஞர் மட்டுமல்லாமல் சுதந்திரப் போராட்டவீரர், எழுத்தாளர், பத்திரிகையாளர், சிறந்த சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார். மகாகவி என்றும். தேசியக் கவி என்றும், மக்கள் கவி என்றும், செந்தமிழ்த்தேனி என்றும் பல சிறப்புப் பெயர்களால் போற்றப்படுகிறார்.

பாரதியார் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் தேதி. எட்டயபுரம் என்ற ஊரில் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் சின்னசாமிஐயர், தாயாரின் பெயர் லக்குமி அம்மாள். பாரதியார் சிறு வயதிலேயே கவிப்புலமை கொண்டுவிளங்கியதால், 11 வது வயதில் ''பாரதி'' என்ற பட்டத்தை எட்டயபுர மன்னனிடமிருந்து பெற்றார். இவரது கவித் திறமையை அங்கீகரித்தே இந்தப் பட்டம் வழங்கப்பட்டது.

இந்தியாவின் விடுதலைக்காக தேசிய உணர்வு மிக்க கவிதைகள் மூலம் மக்களை ஒன்றுபடுத்தினார். இதனால் தேசியக் கவிஞர் எனப் போற்றப்பட்டார். உணர்ச்சிமிக்க பாடல்கள் வழியாக மக்களுக்கு விடுதலைத் தாகத்தை ஏற்படுத்தினார். அவர் எல்லா மக்களையும் ஒன்றாகவே கண்டார். சாதி, மத



வேறுபாடுகளை அவர் ஒதுக்கினார். பெண் விடுதலைக்காக முதலில் குரல் கொடுத்தவர் பாரதியாரே. பெண்களின் கல்வி, பெண்களின் உரிமை, சமத்துவம் ஆகியவைகளை வலியுறுத்தி விடுதலைக் கும்மி பாடினார்.

பாரதியார் தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு வங்காளம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார் அதனால்தான், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்றும் கம்பனைப் போல் வள்ளுவர் போல், இளங்கோவைப்போல் யாங்கணுமே பூமி தன்னில் கண்டதில்லை என்று பெருமையுடன் பாடினார்.

பாரதியார் பாடிய கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பன காவியத் தரம் மிக்கவையாகப் புகழ் பெற்றவை. குழந்தைகளுக்காக பாப்பா பாட்டு பாடிய பாரதியார், அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதிலேயே என்றும் கூறி அச்சம் தவிர். ஆண்மை தவறேல் என்று புதிய ஆத்தி சூடியும் தந்தார். புதுமை கண்ட பாரத பழமையையும் முற்றாகக் கைவிடவில்லை. பராசக்தி மீது பக்தி நிறைந்து பாடல்கள் பாடியுள்ளார்.

இந்திய மக்களுக்கும் தமிழுக்கும் புத்துயிரூட்டிய பாரதி 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதி, தனது 39வது வயதில் இந்த உலகை விட்டு நீத்தார். தனது குறுகிய கால வாழ்விலேயே, தமிழுக்கும் இந்திய சுதந்திரத்திற்கும் உரமிட்டு சென்றார் பாரதி. பாரதியின் மறைவு நூறாண்டுகளைக் கடந்துவிட்ட போதிலும் எம் உள்ளங்களில் பாரதியை நினைவு கூறுகிறோம். தமிழ் உள்ளளவும் பாரதியின் புகழ் நிலைத்திருக்கும்.

லவங்கி பகீரதன்
ஆண்டு 10

# அப்துல்கலாம் தமிழுக்கு ஆற்றிய தொண்டு



அப்துல்கலாம் அவர்கள் 1931ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் திகதி தமிழ்நாட்டில் உள்ள இராமேசுவரத்தில் உள்ள ஜைனுலாப்தீன் மற்றும் ஆசியம்மா ஆகியோருக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்தார். கலாம் சிறுவனாக இருந்தபோது, இவர் குடும்பத்தின் துயரைப் போக்க செய்தித்தாள்களை விற்க வேண்டியிருந்தது.

இவர் தனது பள்ளி பருவத்தில், தனது படிப்பில், குறிப்பாக கணிதம் கற்பதில் நேரத்தைச் செலவிட்டார். இராமநாதபுரம் மேல்நிலைப் பள்ளியில் கல்வியை முடித்து, அரசாங்கத்தின் உதவித்தொகையில் தொழில்நுட்ப நிறுவனத்தில் விண்வெளி பொறியியல் கற்று முதுகலை பட்டம் பெற்றார்.

அப்துல் கலாம் அவர்கள், இந்தியாவின் அறிவியல் துறையிலும், நாட்டின் முன்னணி தலைவர் பதவியிலும் சிறப்பானவராக இருந்து வந்தார். இவர் தமிழுக்கு வழங்கிய தொண்டு மிக முக்கியமானது. தமிழின் வளர்ச்சிக்கு பல்வேறு அம்சங்களில் பங்களித்தார். அவர் தமிழை நேசித்தார். இவர் தமிழ் மொழியைப் புரிந்து பேசி, தமிழின் சிறப்புகளை முன்னெடுத்து முனைந்தார்.

இவர் தமிழில் பல் நூல்களை எழுதினார், சிறுவர்கள் மற்றும் பாமர மக்களுக்கு அறிவியல் மற்றும் வாழ்க்கைத் தர்மங்களை தமிழில் அறிமுகப்படுத்தினார். இதன் மூலம் தமிழில் அறிவியல் கற்பதை எளிதாக்கினார். இவருடைய எழுத்துக்கள் மற்றும் பேச்சுக்களால் தமிழ் மொழியுடன் சேர்ந்து எமது கலாச்சாரமும் மேம்பட முக்கிய பங்கு வகுத்தார்.

அப்துல்கலாமின் தொண்டு தமிழுக்கு மட்டும் அல்ல, தமிழர் சமுதாயத்திற்கும் பெரும் உதவியாக அமைந்தது. தமிழில் அறிவியல் கல்வி வளர்ச்சி, மொழி வளம், பாதுகாப்பு மற்றும் சிறந்த கல்வி முறைகள் உருவாக காரணமாக இருந்தார்.

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் மற்றும் விஞ்ஞானியான, டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் தமிழின் வளர்ச்சி மற்றும் அதனை பராமரிப்புக்காக பல முக்கியமான பணிகளை செய்தார். அவருடைய தமிழ் பற்றும் அதற்காக பல தொண்டுகளும் செய்தார்.

அப்துல்கலாம் தமிழ் மொழிக்கு அறிவியல் அறிவை கொண்டு வந்தவர். அவர் எழுதிய நூல்கள் குறிப்பாக எனது கனவுகள் மற்றும் இந்தியா 2020 இவற்றை தமிழில் வெளியிட்டார். இது மக்களுக்கு அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் நாட்டுப்பற்றை மிக எளிமையாக எடுத்துரைக்கின்றன.

எம்மை போன்ற இளைஞர்களுக்கு தாய்மொழியில் கல்வி கற்பதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, மாணவர்களை தங்கள் கனவுகளை சாதிக்க தாய் மொழியையும், அறிவியலையும் இணைக்கச் சொன்னார். மேலும் இவர் ஊடக வழியாக உரைகளை நிகழ்த்தி, விழிப்புணர்வை ஏற்படுத்தனார்.

இவாின் உரைகளில் தமிழின் செம்மையையும், அதன் பண்பாட்டு அடையாளத்தையும் எடுத்துரைத்து தமிழ் எனது உள்ளத்தின் மொழி என்று அவர் தனது மொழிப்பற்றை எடுத்துச் கூறினார். மேலும் தமிழில் இருந்த ஆர்வத்தால், தமிழ் மொழியை எழுதுக் கற்றுக் கொண்டவர்.

அப்துல்கலாம் அவர்கள் எம்மை போன்ற இளைஞர்களுக்கு கூறியச் சென்றவை....



1. கனவுகள் பெரியதாக இருத்தல் வேண்டும். பெரிதாக இருந்தால் தான் நாம் அதனை அடைய முயற்சிப்போம்.

"You have to dream before your dreams can come true"

2. உழைப்புக்கு ஆர்வம் அவசியம் வெற்றிக்கு எந்த மாற்று வழியும் இல்லை. கடின உழைப்பு மற்றும் ஆர்வம் தான் வெற்றிக்கான பாதை.

3. திறமைகளை மேம்படுத்திக் கொள்

"Excellence happens not by accident. It is a process.". சிறந்த நபராக நீ உருவாகுவதற்கு கடைசிவரை தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

4. நம்பிக்கை மற்றும் தைரியம் தோல்விகளையும், சவால்களையும் பயப்படாமல், நம்பிக்கையுடன் எதிர் கொள்ள வேண்டும்.

5. தேசிய சேவை மற்றும் பிறருக்கு உதவுதல்

"Service to the nation is service to God.". நாடு மற்றும் சமூகத்திற்கு சேவை செய்வதே உயர்ந்த கடமை என்று கூறினார்.

6. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் இதில் திறமை வளர்த்துக் கொண்டு அதில் பணியாற்றி நாட்டை முன்னேற்ற வேண்டும் என்று இளைஞர்களுக்கு ஊக்கம் கொடுத்தார் டாக்டர் அப்துல் கலாம் தமிழின் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகளை கல்வி, அறிவியல், பண்பாடு ஆகிய துறைகளில் காணக்கூடியதாக உள்ளது.

தமிழுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் அவர் அளித்த பங்களிப்பு வாழ்நாள் முழுவதும் நினைவு கூறப்பட வேண்டியவையாகும்.



**அப்துல் கலாம் தமிழுக்கு ஆற்றிய தொண்டு; ஆக்கம் பங்களித்தோர்**

பிரகாஷ் விஜயகுமார்
நிலுக்ஷன் குலராஜ்
கஜன் ஈஸ்வரபாதம்
திலன் தியாகராஜா
அருண் சுந்தரவடிவேல்



# விடுதலை



ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து



அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

**எழுதியவர்: நவாலியூர் சோமசுந்தரப்புலவர்**



# தமிழ்க் கதிர்

ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தினால் வெளியிடப்படும்

**மாணவர் சஞ்சிகை மின்னிதழை பார்வையிட ஸ்கேன் செய்யுங்கள்**